# TAMIL LANGUAGE

# PRIMARY FOUR

# (2025)

**நோக்கு** : ஆர்வமுட்டும் முறையில் தமிழ்மொழியைக் கற்பித்தல்

**செயல்** : மாணவர்களுக்குப் பலதரப்பட்ட கற்பித்தல் முறைமைகளைக் கொண்டு தமிழ்மொழியை ஆர்வத்துடன் கற்கத் தூண்டுதல்

## தமிழ்க் கற்றல் - கற்பித்தல் கொள்கை

தமிழ் பயிலும் மாணவர்கள் தத்தம் திறனுக்கேற்பத் தமிழ்மொழியில் தமது திறனை வளர்த்துக் கொள்ளத் தமிழ் கற்றல்-கற்பித்தல் கொள்கை வழி வகுத்துள்ளது. பள்ளிகளில் தொடக்கநிலை முதலாம் வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரை தமிழ்மொழி ஒரே நிலையில் கற்பிக்கப்படுகிறது. இவ்வகுப்புகளில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொடரும் வகுப்புகளில் தமிழ் பயில்வதற்குத் தேவையான அடித்தளத்தை இப்பயிற்சி அளிக்கிறது.

வகுப்பறையில் தமிழில் கலந்துரையாடும் சூழலை உருவாக்கித் தந்து அதன்வழி இருவழித்தொடர்புத் திறன்களையும் மாணவர்களின் தமிழார்வத்தையும் வளர்க்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். பாடத்திட்டம், கற்பித்தல் முறைகள், மதிப்பீடு ஆகிய மூன்று அடிப்படைக் கூறுகளைக் கொண்டமைந்த பாடத்திட்டத்தைப் பின்பற்றியே பாடம் கற்பிக்கப்படுகின்றது.

**அறுவகைத் திறன்கள்**

சிங்கப்பூர் பள்ளிகளில் தொடக்கநிலை மாணவர்களிடம் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், பேச்சுவழிக்கருத்துப்பரிமாற்றம், எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம் என்னும் ஆறு கூறுகளின் அடிப்படையில் பல்வேறு உத்திமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன.

**தமிழைக் கற்பிப்பதன் நோக்கம்**

தமிழை மாணவர்களுக்கு மூன்று முக்கிய நோக்கங்களுக்காகக் கற்பிக்கின்றோம்.

- அடிப்படை மொழித்திறன்களில் முறையான பயிற்சி அளித்தல்;
- நம் பண்பாட்டுக் கூறுகளையும் பாரம்பரியக் கூறுகளையும் அறியச்செய்தல்;
- நாட்டுருவாக்கத்திற்குத் தேவையான பண்பு நலன்களைப் பெற்றிடச்செய்தல்; ஆகியவற்றின் அடிப்படையில் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

## சூச்சின் தொடக்கப்பள்ளியின் பாடத்திட்டம்

- தமிழோசை பாடநூல்

  4A - மொத்தம் 6 தொகுதிகள் உள்ளன (தொகுதி 1 – 6)

  4B - மொத்தம் 6 தொகுதிகள் உள்ளன (தொகுதி 7 - 12)
- தமிழோசை பயிற்சிநூல்

  4A - மொத்தம் 6 தொகுதிகள் உள்ளன (தொகுதி 1 – 6)

  4B - மொத்தம் 6 தொகுதிகள் உள்ளன (தொகுதி 7 - 12)
- 4A / 4B - சொல்பட்டியல் (தொகுப்பு)
- சிறுவர் கதைநூல்கள் -
- மொழி - பயிற்சித்தாள்கள்
- சொல்வதெழுதுதல் – (சொல்வளப்பட்டியல்)
- தேர்வுத்தாள்கள்
- தமிழோசை இனணயத்தளம்
- சொற்பொருள்
- SLS இணையத்தளம்
- மொழி விளையாட்டுப் பலகைகளும் அட்டைகளும்

### பள்ளிக்கொண்ட நடவடிக்கைகள்

- மௌன வாசிப்பு - Uninterrupted Sustained Silent Reading (USSR)
- சூச்சினில் வாசிப்பை நேசிப்போம் - வாரந்தோறும் வாசிக்கும் நேரம்
- இலக்குகளை நோக்கிய வாசிப்பு – அக்பர் / பீர்பால் கதைகள், தெனாலிராமன் கதைகள் )
- கதை நேரம் (கைப்பாவை / பாத்திரப்படைப்பு)
- தமிழ்மொழி இருவார நடவடிக்கைகளில் மொழியின் மீதும் பண்பாட்டின் மீதும் ஆர்வத்தை ஏற்படுத்துதல்
- மொழி விளையாட்டு
- பாரம்பரிய விளையாட்டுகள்
- பண்பாடு சார்ந்த நடவடிக்கைகள்

**P4 End of Year – TOS (2025)**

தேன்தமிழ் பாடநூல் / பயிற்சிநூல் 4A தொகுதி 1 முதல் 5 வரை

தேன்தமிழ் பாடநூல் / பயிற்சிநூல் 4A & 4B தொகுதி 1 முதல் 10 வரை

| எண் | தலைப்புகள் | வகை | வினாக்களின் எண்ணிக்கை | மதிப்பெண் | (%) |
|---|---|---|---|---|---|
| **தாள் 1 கட்டுரை** | **படக்கட்டுரை**<br>60 சொற்களுக்குக் குறையாமல் எழுத வேண்டும் | OE | 1 | **15** | **15%** |
| | | | | | |
| **தாள் 2 மொழி**<br><br>மொழிப் பயன்பாடும் கருத்தறிதலும் | **வேற்றுமை**<br>தெரிவுவிடை வினா | MCQ | 4 | 8 | 8% |
| | **செய்யுள் / பழமொழி**<br>• தெரிவுவிடை வினா | MCQ | 5 | 10 | 10% |
| | **கருத்தறிதல்**<br>• தெரிவுவிடை வினா<br>• எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம் (சுயவிடை) | MCQ<br><br>OE | 3<br><br>1 | 6<br><br>4 | 10% |
| | **முன்னுணர்வுக் கருத்தறிதல்**<br>• கோடிட்ட இடங்களை நிரப்புதல் | FIB | 4 | 8 | 8% |
| | **சுயவிடைக் கருத்தறிதல்**<br>• சுயவிடை | OE | 5 | 9 | 9% |
| | **மொத்தம்** | | **22** | **45** | **45%** |

**காலஅளவு**

**தாள் 1 – 40 நிமிடங்கள்**

**தாள் 2 – 1 மணி நேரம்**

**P4 EOY – TOS (2025)**

**கேட்டல் கருத்தறிதல் & வாய்மொழி**

| எண் | தலைப்புகள் | வகை | வினாக்களின் எண்ணிக்கை | மதிப்பெண் | (%) |
|---|---|---|---|---|---|
| **தாள் 3 கேட்டல் கருத்தறிதல்** | படத்தைத் தெரிவு செய்தல் | MCQ | 3 | 10 | 10% |
| | எதிருரைப்பனுவல் | MCQ | 1 | | |
| | கேட்டல் கருத்தறிதல் (3 பனுவல்கள்) | MCQ | 6 | | |
| | **மொத்தம்** | | **10** | **10** | **10%** |
| **தாள் 4 வாய்மொழி** | • **வாய்விட்டு வாசித்தல்** | Reading | 1 | 10 | 10% |
| | • படத்தைப் பற்றி விவரித்துச் சொல்லுதல் | OE | 1 | 10 | 10% |
| | • படத்தோடு தொடர்புடைய உரையாடல் | | 1 | 10 | 10% |
| | **மொத்தம்** | | 3 | 30 | 30% |
| | **ஆக மொத்தம்** | | **36** | **100** | **100%** |

## தாள் 1 – எடுத்துக்காட்டு

தொடக்கநிலை நான்காம் வகுப்புக்கு, ஒரு கட்டுரை இடம்பெறும். அது படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு அமையும். படத்தொடர் 4 கட்டங்கள் கொண்டது. மாணவர் கட்டுரை எழுதுவதற்கு 10 துணைச்சொற்கள் கொடுக்கப்பட்டிருக்கும். மாணவர் 60 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுத வேண்டும். இதற்குக் கொடுக்கப்படும் கால அளவு 40 நிமிடங்கள்.

முன்னுரையில் வர்ணிக்கும் உத்தி

முன்னுரை

அன்று ஓர் **இனிமையான காலைப்பொழுது.** கதிரவன் பள்ளிக்குச் சென்றான்.அவன் கணிதப் பாடத்தைச் செய்துகொண்டிருந்தான். அப்போது பள்ளி இடைவேளை மணி 'ரிங்' என்று சத்தமாக ஒலித்தது. கதிரவனும் அவன் நண்பர்களும் பள்ளி உணவகத்திற்குச் சென்றனர். பள்ளி உணவகத்தில் மாணவர்கள் **ஈக்கள் போல்** மொய்த்தனர்.

பொருளுரை

கதிரவனுக்குப் **பசி வயிற்றைக் கிள்ளியது**. அவன் நாசி லாமாவைச் சாப்பிட அந்தக் கடையின் வரிசையில் நின்றான். அந்த நேரத்தில் ஒரு மாணவி சூடான சூப்பைத் தூக்கிக்கொண்டு நடந்தாள். அவள் கை நடுங்கியது. அதைப் பார்த்ததும் அவளுக்கு உதவ ஓடினான். அவன் அவளின் சூப்பை வாங்கிக்கொண்டு போய் அமர்ந்து உண்ணும் இடத்தில் வைத்தான்.

இனியத்தொடர்

**அவள் முகம் சூரியனைக் கண்ட தாமரையைப் போல் மலர்ந்தது.** அவள் அவனுக்கு நன்றி கூறினாள். பிறகு, அவன் உணவுக் கடையின் வரிசையில் சென்று நின்றான். அவன் செய்த **நற்செயலைக்** கவனித்த ஓர் ஆசிரியர் அவனைப் பாராட்டினார். அவன் மனம் **ஆனந்தக் கூத்தாடியது**.

முடிவுரை

அவன் நடந்ததை அவன் பெற்றோரிடம் கூறினான். அவர்கள் அவனைக் கட்டி அணைத்துப் பாராட்டினார்கள். அந்தச் சம்பவம் அவன் **மனத்தில் சிலையில் செதுக்கிய எழுத்துப்போல்** பதிந்தது. **அந்தச் சம்பவம் என் மனதில் ஆழமாகப் பதிந்தது.**

நன்றி - K.P.ஜெகதீஸ்வரன் 4B1

## சரிபார்க்கும் பட்டியல்

| | **முன்னுரை** | ✓ |
|---|---|---|
| 1 | நான் முன்னுரையில் உரையாடல் உத்தியைப் பயன்படுத்தித் தொடங்கியுள்ளேன் | |
| 2 | நான் முன்னுரையில் வர்ணிக்கும் உத்தியைப் பயன்பயடுத்தியுள்ளேன் | |
| 3 | நான் முன்னுரையில் கதையின் கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்தியுள்ளேன் | |
| 4 | நான் முன்னுரையில் கதை நிகழும் இடத்தை எழுதியுள்ளேன் | |

| | **பொருளுரை** | ✓ |
|---|---|---|
| 1 | நான் கதையின் இடையுரையில் பிரச்சினையைப் பற்றி எழுத ஆரம்பித்துவிட்டேன் | |
| 2 | கதையின் பிரச்சினையை நான் விரிவாக எழுதியுள்ளேன் | |
| 3 | அனைத்து வாக்கியங்களும் தொடர்புடையதாக அமைந்துள்ளன | |
| 4 | நான் வாக்கியங்களைச் சரியாக இணைத்துள்ளேன் | |

| | **முடிவுரை** | ✓ |
|---|---|---|
| 1 | நான் கதையின் முடிவுரையில் பிரச்சினை எப்படித் தீர்ந்தது என்பதை எழுதியுள்ளேன் | |

| | **கட்டுரையில்...** | ✓ |
|---|---|---|
| 1 | நான் கட்டுரையில் இனிய தொடர்களைப் பயன்படுத்தியுள்ளேன் | |
| 2 | நான் கட்டுரையில் அடைமொழிகளைப் பயன்படுத்தியுள்ளேன் | |
| 3 | நான் கட்டுரையில் பழமொழி / செய்யுள் ஆகியவற்றை பயன்படுத்தியுள்ளேன் | |

**<u>கட்டுரை மதிப்பீடு</u>**

**தொடக்கநிலை 4 2025**

**பெயர்:** ______________________________ **தேதி:** ____________________

**கட்டுரைத் தலைப்பு** __________________________ **கட்டுரை :** ____

| **கருத்து** | **7** | ஆசிரியர் கருத்து |
|---|---|---|
| 1. தொடக்கம் | ✓ | |
| • இனியச்சொற்றொடர்கள்<br>• கதாபாத்திர அறிமுகம் | | |
| 2. கதை வளர்ச்சி | ✓ | ஆசிரியர் கருத்து |
| • தொடர்புபடுத்தி எழுதுதல் | | |
| 3. முடிவு | ✓ | ஆசிரியர் கருத்து |
| • ஏற்புடையது<br>• மகிழ்ச்சியான முடிவு | | |

| **மொழி** | **8** | ஆசிரியர் கருத்து |
|---|---|---|
| • ஆர்வமூட்டும் நடை | ✓ | |
| மொழியைக் கையாளும் திறன்<br>• சொல்லாட்சி<br>• எழுத்துப்பிழைகள்<br>• வாக்கிய அமைப்பு<br>• இலக்கணப் பிழைகள் | | |
| • இனியத் தொடர்கள் | | |
| • முற்றுப்புள்ளி | | |

பெற்றோர் கருத்து: ______________________________________________

பெற்றோர் கையொப்பம்: ______________________________

**அமைப்புப் பிழைகளும் குறியீடுகளும் இலக்கணப் பிழைகளும் அதன் எண்களும்**

முன்னுரை (முன்)
இடையுரை (இடை)
முடிவுரை (முடிவு)
அழகிய சொல் /வாக்கியம் (✓)
தவறான சொல் (☐)
வேற்றுமை உருபு பிழை (வே)
எழுவாய் பயனிலை பிழை (எ.ப)
ஒருமை பன்மை பிழை (ஒ.ப)
காலங்களில் பிழை (கா)
ஒரே பிழை மீண்டும் செய்தல் ☒
வாக்கியப் பிழை | |
சொல் / வாக்கியம் விடுதல் △

| | |
|---|---|
| 1 | குறில் நெடில் பிழை (ஓருவன் – ஒருவன்) |
| 2 | ஒலி வேறுபாடு பிழை (மூவறும் – ரு) |
| 3 | எகர ஒகர பிழை (கெண்டான் – கொ) |
| 4 | ஐ – கே மயக்கம் (அங்கை – கே) |
| 5 | ட – த மயக்கம் (பந்டு – து) |
| 6 | ற் – க் பிழை (விற்க்கும் – விற்கும்) |
| 7 | ந் – ன் மயக்கம் (நடன்தது – ந்) |
| 8 | எழுத்துப்பிழை (இழத்தார் – இழுத்தார்) |
| 9 | சொற்பிழை (ஒண்று – ஒன்று) |
| 10 | வல்லொற்றுப் பிழை (க், ச், த், ப் ) |
| 11 | நிறுத்தற்குறி பிழை (. , ? ! “ ) |
| 12 | எழுத்து விடுதல் (பார்^து – பார்த்து |

**தாள் 2**

தொடக்கநிலை நான்கு பாடத்திட்டத்தில் மாணவர்களுக்குச் சோதிக்கப்படும் மொழிக்கூற்றில் வேற்றுமை வாக்கியங்களாகக் சோதிக்கப்படுகின்றது. அதனை அடுத்து தெரிவுவிடைக் கருத்தறிதலில் ஒரு கேள்வி நண்பனுக்குக் குறிப்பு வரைதல் போல அமைந்துள்ளது. மாணவர்கள் பனுவலைக் கவனமாகப் படித்துப் பதிலெழுதுதல் வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

1. **வேற்றுமை**

1. இந்த வணிகக் கப்பல் ________________________ இங்கிலாந்துக்குச் செல்கிறது.

   (1) சிங்கப்பூரிலிருந்து

   (2) சிங்கப்பூரால்

   (3) சிங்கப்பூருடைய

   (4) சிங்கப்பூரிடம்

**2.எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்**

கோபி செய்த தவற்றினால் என்னென்ன நடந்தது என்பதை விளக்கி உன் நண்பன் மதிக்கு ஒரு குறிப்பு எழுது.

அன்புள்ள மதிக்கு,

கோபி தன் தந்தை கூறிய அறிவுரையை ______________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

_____________________________________________________________________.

அன்புடன்,
மாதவன்

## வாசிப்புப் பனுவல்

பறவைகள் எல்லாம் கூடித் தங்களுக்கு ஓர் அரசனைத் தேர்ந்தெடுக்க விரும்பின. அங்கிருந்த குயில் தனது அழகான குரலில் பாடிக் காட்டியபடி, ''நானே உங்கள் அரசன்!'' என்று பாடியது. அங்கே இருந்த பறவைகள் குயிலின் அழகிய குரலைக் கேட்டு மயங்கி, அதையே தங்கள் அரசனாக ஏற்றுக்கொண்டன.

பக்கத்தில் இருந்த ஆந்தை, "குயிலே, இப்போது நீ எங்கள் அரசனாகிவிட்டாய். பருந்து துரத்தினால் நீ எங்களை எப்படிக் காப்பாற்றுவாய்?" என்று கேட்டது. குயில் ஆந்தையின் கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாமல் பேசாமல் நின்றது.

## வாய்விட்டு வாசித்தல்

| **படித்தல்:<br>10 மதிப்பெண்கள்** | |
|---|---|
| மிகத் தெளிவான சரியான உச்சரிப்பு<br>சரளமான வாசிப்பு<br>சரியான ஏற்றயிறக்கமும், தயக்கமற்ற ஏற்ற ஓசை நயம் கொண்டிருத்தல் | |
| ஒரு சில தவறுகள் மட்டுமே, கருத்தைப் புரிந்துகொள்வதில் தடை ஏற்படாத உச்சரிப்பு<br>ஓரளவுக்குச் சரளமான வாசிப்பு<br>ஓரளவுக்குச் சரியான ஏற்றயிறக்கமும் தயக்கமற்ற ஓசைநயமும் கொண்டிருத்தல் | |
| ஓரளவுக்குத் தெளிவான உச்சரிப்பு<br>ஒரு சில தவறுகளை மட்டும் கொண்ட சரளமான வாசிப்பு<br>ஓரளவுக்குச் சரியான ஏற்றயிறக்கமும் ஓசைநயம் கொண்டிருத்தல் | |
| கருத்தைப் புரிந்து கொள்ளத் தடையாக அமைந்த பல உச்சரிப்பு பிழைகளைக் கொண்ட வாசிப்பு<br>தயக்கத்துடனும் ஏற்றயிறக்க மற்றும் ஓசைநயமின்றியும் வாசித்தல் | |
| மிகவும் தெளிவற்ற பல உச்சரிப்பு பிழைகளைக் கொண்ட வாசிப்பு<br>அதிகத் தயக்கத்துடனும் ஏற்றயிறக்கம் ஓசைநயமின்றியும் வாசித்தல் | |

**பனுவலை வாசிக்கும் போது**

- உச்சரிப்பும் சொல்லழுத்தமும் தெளிவாகவும் சீராகவும் அமைதல் வேண்டும்
- பனுவலை மிகச் சரளமாக வாசித்தல் வேண்டும்
- பொறுத்தமான இடங்களில் நிறுத்தியும் தயக்கமின்றியும் வாசித்தல் வேண்டும்
- பொறுத்தமான இடங்களில் ஏற்ற இறக்கத்துடன் வாசித்தல்

**<u>பட உரையாடல் ஓர் எடுத்துக்காட்டு</u>**

1. **<u>இடம் & மக்கள்</u>**

- ✓ காட்சியில் உள்ள இடம் எங்குள்ளது?
- ✓ எதைப் பற்றியது?
- ✓ மனிதர்கள் – அங்கிருப்பவர்கள் யார்
- ✓ மாணவர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், பொதுமக்கள் மற்றும் அங்கிருக்கும் மனிதர்கள்

**இந்தப் படம் ஒரு பூங்காவைச் சித்தரிக்கின்றது. இங்குப் பலர் தங்கள் பொழுதைப் இன்பமாகப் போக்க வந்துள்ளனர். இது ஒரு காலை நேரமாக இருக்கலாம். ஒவ்வொருவரும் ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.**

**<u>முகபாவனை</u>**

- ✓ முகங்கள் உணர்த்தும் உணர்ச்சிகளைக் கண்டறிதல்
- **மகிழ்ச்சி**
- **புன்னகை பூத்த முகத்துடன்**
- **அதிர்ச்சி**
- **உற்சாகம்**

ஒரு சிறுவன் மிதிவண்டி ஓட்டுகிறான். அவனுக்கு மிதிவண்டி ஓட்டுவதென்றால் கொள்ளை ஆசை. அவன் மிகவும் **மகிழ்ச்சியுடன்** மிதிவண்டியை ஓட்டுகிறான்.

1) சிறுமி ஒருத்தி ஒரு பூவைப் பறிக்கிறாள். அவளுக்கும் பூக்கள் என்றால் மிகவும் விருப்பம். அவள் அந்த அழகான பூவைப் **புன்னகை பூத்த முகத்துடன்** தன் அம்மாவிடம் காண்பிக்கிறாள்.

2) அம்மா தன் மகளின் செயலைக் கண்டு மிகவும் **அதிர்ச்சியடைகிறார்.**

3) ஆடவர் மிகவும் **உற்சாகத்துடன்** உடற்பயிற்சி செய்கிறார்.

4) முதியவர் **ஆர்வத்துடன்** செய்தித்தாள் வாசிக்கிறார்.

**<u>செயல் / நடவடிக்கை</u>**

✓ அவ்விடத்தில் நடக்கும் நடவடிக்கை, நிகழ்ச்சி, சம்பவம் ஆகியவற்றைக் கண்டறிந்து
கூறுதல்.

- முதியவர் ஒருவர் ஓர் இருக்கையில் அமர்ந்து செய்தித்தாள் வாசிக்கிறார்.
- கண்ணாடி அணிந்துள்ள சிறுவன் ஒருவன் மிட்டாயை ருசித்து உண்கிறான்.
- ஆடவர் சுறுசுறுப்புடன் உடற்பயிற்சி செய்கிறார்.
- சுருட்டை முடி கொண்ட சிறுவன் உற்சாகத்துடன் மிதிவண்டி ஓட்டுகிறான்.
- சிறுமி ஒருத்தி ஆர்வத்துடன் பூவைப் பறிக்கிறாள்.

- சிறுமியின் தாயார் கோபத்துடன் தன் மகளிடம் பூவைப் பறிக்க வேண்டாம் என்று கூறுகிறார்.

**காரணம்**
**விளைவு**
**தீர்வு**



- ✓ அந்த இடத்தில் அந்தச் செயல் சரியா / தவறா என்று கண்டறிதல்
- ✓ அங்கு நடக்கும் நிகழ்ச்சி நடவடிக்கைகளால் ஏற்படும் விளைவுகள் பற்றிக் கண்டறிதல்
- ✓ அதற்கான தீர்வுகளைக் கண்டறிதல்

**முடிவு**

எனக்கும் பூங்காவிற்குச் செல்லவதென்றால் மிகவும் விருப்பம். நாம் பூங்காவில் குடும்பத்துடன் இன்பமாகப் பொழுதைக் கழிக்கலாம்.

| **படத்தோடு தொடர்புடைய உரையாடல்:**<br>**10 மதிப்பெண்கள்** | |
|---|---|
| கேட்கப்படும் கேள்விக்குச் சொந்தநடையில் மிகச் சரளமாகவும் பொருத்தமாகவும் அனைத்துக் கருத்துகளையும் கூறுதல் | |
| கேட்கப்படும் கேள்விக்குச் சொந்தநடையில் சரளமாகவும் பொருத்தமாகவும் பெரும்பாலான கருத்துகளையும் கூறுதல் | |
| கேட்கப்படும் கேள்விக்கு ஓரளவுக்குச் சொந்தநடையில் சரளமாகவும் பொருத்தமாகவும் கருத்துகளைக் கூறுதல் | |
| கேட்கப்படும் கேள்விக்குத் தட்டுத்தடுமாறி பொருத்தமற்ற கருத்துகளை ஆசிரியர் தூண்டுதலுடன் கூறுதல் | |
| தனித்தனிச் சொற்களாகத் தெளிவில்லாமல் ஆசிரியர் தூண்டியும் பேச இயலாது இருத்தல் | |

**படத்தோடு தொடர்புடைய உரையாடல்**

- பொருத்தமான கருத்துகளைக் கூறுதல் அவசியம்
- கருத்துப்பரிமாற்றத்திலும் தொடர்ச்சியாக ஈடுபடுதல் வேண்டும்
- பொருத்தமான சொல்லாட்சி பயன்படுத்துதல் வேண்டும்
- கருத்துகளைத் தெளிவாகவும் சரளமாகவும் எடுத்துரைத்தல் வேண்டும்
- பேச்சுத்தமிழில் பேசுவது சிறப்பானது

**பள்ளி உணவகத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைப் பற்றிக் கூறு.**

**தொடக்கம்**: ஒரு சம்பவத்தை விவரித்துச் சொல்வதற்கு முன்னால் 3 அல்லது 4 பொதுவான கருத்துகளைக் கூறித் தொடங்குவது சிறப்பு.

**எ.டு:** அன்று பள்ளி இடைவேளை நேரம். அன்று மழை பெய்துகொண்டிருந்தது. நானும் என் தோழியும் பேசிக்கொண்டு பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்தோம். அங்குச் சென்றவுடன் நான் உணவு வாங்கச் சென்றேன். நான் உணவு வாங்கிக்கொண்டு வரும்போது ஒரு சிறுமி வேகமாக ஓடிப் பிடித்து விளையாடிக்கொண்டிருந்தாள்.

**சம்பவம்:** தொடர்ந்து சம்பவத்தை விவரிக்கவேண்டும.

மழை பெய்திருந்ததால் தரை ஈரமாக இருந்தது. அவள் வேகமாக ஓடிவந்ததால் அவள் வழுக்கி விழப் போனாள். உடனே என் தோழி அவளுக்கு உதவச் சென்றாள். அப்போது அம்மாணவி என் தோழியை மோதிவிட்டுக் கீழே விழுந்தாள். இருவருக்கும் பலத்த காயம் ஏற்பட்டது.

நான் உடனே இருவருக்கும் உதவி செய்யச் சென்றேன். நல்ல வேளை! அவள் என் தோழியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள். இந்தச் சம்பவத்தை என்னால் என்றுமே மறக்கமுடியாது.

**குறிப்பு:-**
மாணவர்கள் தங்கள் அனுபவங்களுக்கு உட்பட்ட செய்திகளைப் பகிர்ந்து கொள்ளலாம். அனுபவம் இல்லாத பட்சத்தில் கற்பனை செய்து பேசலாம்.

**கேட்டல் கருத்தறிதல்**

வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், வார மாத இதழ்கள் போன்றவற்றில் இடம்பெறும் உள்நாட்டுச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், அறிவிப்புகள், கட்டளைகள், விளம்பரங்கள், சிற்றுரைகள், கதைகள், உரையாடல்கள், நேர்முகப் பேட்டிகள், சிந்தித்துப் பதிலைத் தேர்வு செய்தல் போன்றவற்றையொட்டிய 10 வினாக்கள் இத்தேர்வில் இடம்பெறும். ஒவ்வொரு வினாவும் 3 தெரிவுகளைக் கொண்டிருக்கும். இத்தேர்வுக்குரிய நேரம் ஏறக்குறைய 30 நிமிடங்கள் ஆகும்.

**எதிருரைப் பனுவலுக்கான மாதிரி**

**பின்வரும் பனுவலைக் கவனமாகக் கேட்டு விடையளிக்கவும்.**

கவிதா: அம்மா, நம்ம வீட்டுக்குப் பக்கத்திலே கேளிக்கைச் சந்தை ஆரம்பித்துவிட்டாங்க! அங்க போக எனக்கு ஆசையா இருக்குது. வர ஞாயிற்றுக்கிழமை நம்ம குடும்பத்தோட அங்க போகலாமா?

அம்மா: ............

வினா 4 : அம்மாவின் பதில் என்னவாக இருந்திருக்கும்?

1. அப்படியா! புறப்படு போகலாம்.
2. அப்படியா! கண்டிப்பாகப் போகலாம்.
3. அப்படியா! எத்தனை மணிக்குப் போவாய்?

**குறிப்பு:-**



மாணவர்கள் மேலே கொடுக்கப்பட்டுள்ள எதிருரைப் பனுவலில் அடுத்த உரையாடல் என்ன என்பதை ஊகித்துப் பதிலைத் தேர்வு செய்யவும். மாணவர்களின் கவனம் பனுவலில் இருத்தல் அவசியம்.

## கருத்தறிதலில் பின்பற்றப்படும் உத்தி முறைகள்

## கருத்தறிதல் பனுவலை வடிவம் கொண்டு புரிந்துகொள்ளுதல்

மாணவர்கள் கருத்தறிதலைப் புரிந்துகொள்ளவும் பதில்களைச் சரியாகக் கண்டறிந்து எழுதவும் இந்த வடிவங்களைப் பயன்படுத்த ஊக்குவிக்கிறோம் இந்த வடிவங்களை . மாணவர்கள் பனுவலை வாசிக்கும்போது பயன்படுத்தினால் கேள்விக்குப் பதிலைச் சுலபமாகக் கண்டறிந்து விடலாம்.

**கேள்விக்கான வடிவங்கள்**

| கேள்விச்சொல் | வடிவம் | விளக்கம் |
|---|---|---|
| யார் |  | மனிதர்களைக் குறிப்பது |
| என்ன |  | நடந்த செயல், ஒருவர் செய்த செயல் (அ) அறிந்துகொண்ட செய்தி மற்றும் ஒரு பொருள் |
| எப்போது |  | நிகழ்ந்த காலம், இடம் பற்றிக் கூறுதல் |
| எது |  | மனிதர் அல்லாதவரைக் குறிப்பது |
| எங்கே |  | ஓர் இடத்தின் பெயரை |
| எப்படி/ எவ்வாறு |  | ஒரு செயலை வர்ணிப்பது / ஒரு செயலை விளக்குவது |
| ஏன்/காரணம்/ எதனால் |  | ஒரு செயலினை விளக்கும் காரணம் |

ஆழமான நிலையில் பனுவலைப் புரிந்துகொள்ளுதல்

| கேள்விகள் | ? | |
|---|---|---|
| இணைப்பு வாக்கியம் | C | |
| மையக்கருத்து | O | |

ராமுவின் தந்தை அன்று பப்பாளிப்பழம் வாங்கி வந்தார். அது மிகவும் இனிப்பாக இருந்தது. ராமுவும் பப்பாளிமரம் ஒன்றை வளர்க்க விரும்பினான். அதைப் பற்றி ராமு தந்தையிடம் கூறினான். அவர் பழத்தின் விதைகளை ராமுவிடம் கொடுத்தார்.

அவன் அந்த விதைகளை அவன் வீட்டுத்தோட்டத்தில் போட்டான். சில வாரங்கள் கழிந்தன. அவன் போட்ட விதைகளில் ஒன்று செடியாக வளர்ந்தது. அதைப் பார்த்ததும் அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அவன் அன்றாடம் அந்தப் பப்பாளிச்செடிக்குத் தண்ணீர் ஊற்றினான். அது மரமாக வளர்ந்தது. இப்போது அந்த மரம் நிறையப் பழங்களைத் தருகிறது.

? - பப்பாளிப்பழம் எப்படி இருந்தது?
பப்பாளிப்பழம் இனிப்பாக இருந்தது.

C - ராமு ஏன் பப்பாளி மரம் வளர்க்க விரும்பினான்?

அவன் தந்தை வாங்கி வந்த பப்பாளிப்பழம் இனிப்பாக இருந்தது.
C **அதனால்** அவன் பப்பாளி மரம் வளர்க்க ஆசைப்பட்டான்.

O ராமு போட்ட பப்பாளி விதை மரமாக வளர்ந்து பழம் தருவது.

## <u>சித்திரப் பகடைகளைக்கொண்டு கதை அமைக்கும் உத்தி முறை</u>

**புத்தாக்க முறையில் கதை அமைக்கும் உத்திமுறை**


**என்னாலும் கதை எழுத முடியும்.**



**பெயர்** ____________________________ **வகுப்பு** ________________

**தேர்ந்தெடுத்த சித்திரப்பகடைகளை வரையவும்**

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

| | | |
|---|---|---|
| Settings – சூழலை அமைத்தல் | Talking characters – கதாபாத்திரங்களைப் பேசுதல் | Oops! A Problem ஐயோ! பிரச்சினை |
| Resolution – தீர்வு | Yes! Problem solved. பிரச்சனைக்கான தீர்வைக் கண்டறிந்துவிட்டேன் |  |

கதைகளை உருவாக்குவதற்கும் கற்பனையைத் தூண்டுவதற்கும் "STORY" என்ற உத்திமுறை பெரிதும் உதவியாக உள்ளது. மாணவர்கள் சித்திரப் பகடைகளை உருட்டி உருவாக்கிக் கதை கூறுவதிலும் கதையை விழுமியத்துடன் முடித்தலையும் இந்த உத்தி முறை கொண்டு கற்பிக்கப்படுகிறது.

**கற்றல் வளங்கள்**

- **கல்வியில் பெற்றோர் பங்கு**

  http://parents-in-education.moe.gov.sg/
  கல்வியமைச்சின் இணையத்தளமான இந்தத் தளத்தில் பெற்றோர் பிள்ளைகளின் கற்றலுக்கு உதவுவதற்குப் பயன்படும் தகவல்களும் வளங்களும் உள்ளன.

- **தமிழ்மொழிக் கற்றல் வளர்ச்சிக் குழு**

  http://tamil.org.sg/
  பள்ளிக்கு அப்பாலும் பிள்ளைகள் தமிழ்மொழியைக் கற்பதற்காகச் சமூக அமைப்புகள் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்களை இந்தத் தளத்தில் காணலாம்.

- **தமிழ் வாசிப்புக் குழு**

  http://www.nlb.gov.sg/golibrary/
  மாணவர்கள் பரந்துபட்ட அறிவைப் பெற வேண்டும் என்பதற்காக நூலகம் எண்ணிலடங்கா புத்தகங்களை இரவல் பெறவும் தரவிறக்கம் செய்து படிக்கவும் இந்தத் தளத்தை உருவாக்கியுள்ளது. நாங்கள் இந்தத் தளத்தைப் பயன்படுத்தி பயன்பெற ஊக்குவிக்கிறோம்.

- **மாணவர் கற்றல் தளம்**

  https://vle.learning.moe.edu.sg/login

- **மாணவர் முரசு புதிர்**

  https://www.tamilmurasu.com.sg/

**பெற்றோரிடம் எங்கள் அன்பு வேண்டுகோள்.**
பிள்ளைகளின் உருவாக்கத்தில் ஆசிரியர்களாகிய எங்களுடன் பெற்றோராகிய நீங்கள் இணைந்து பயணிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இந்தக் கையேடு உங்களுக்கு தொடக்கநிலை 4 பற்றிய விரிவான கண்ணோட்டத்தைத் தரும். அதே நேரத்தில் பிள்ளைகளின் முன்னேற்றத்தில் நீங்கள் எங்களுக்கு முழு ஆதவையும் ஒத்துழைப்பையும் தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**முற்றும்**